**17.10.2018**

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.73 நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ஆகிய இரு அரசாணைகள் சொத்துவரி சீராய்வு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதன்படி 10.09.2018ம் தேதிய நகரமன்ற தீர்மான எண்.776ல் 01.04.2018 முதல் மண்டல அடிப்படை மதிப்பு (Zonal Value) 01.04.2018 முதல் உயர்வு செய்தும் மற்றும் திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் உள்ள நன்கு மேம்பாடு அடைந்துள்ள தெருக்களை குறைவான மண்டலத்திலிருந்து அதற்கு மேல் உள்ள மண்டலத்திற்கு மாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தீர்மானம் தொடர்பாக பொதுமக்களின் ஆட்சேபணை மற்றும் ஆலோசனை ஏதுமிருப்பின் 30 தினங்களுக்குள் எழுத்து மூலமாக நகராட்சி அலுவலகத்திற்கு தெரிவிக்கக் கோரி சொத்துவரி உயர்வு தொடர்பான முழு விபரங்களை 13.09.2018ம் தேதிய தினமணி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளிவந்த நாள் முதல் 12.10.2018ம் தேதியுடன் 30 தினங்கள் முடிந்த நிலையில் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே 10.09.2018ல் தீர்மான எண்.776ல் உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட்ட கீழ்காணும் விபரப்படிக்கான மண்டல அடிப்படை மதிப்பு மற்றும் தெருக்களின் மண்டல மாற்றங்கள் உறுதி செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| மண்டலம் | பழைய மதிப்பு | 01.04.2018 முதல் திருத்தம் செய்யப்படும் மதிப்பு |
|---|---|---|
| A | ரூ.1.10 | ரூ.1.65 |
| B | ரூ.0.85 | ரூ.1.30 |
| C | ரூ.0.60 | ரூ.0.90 |
| D | ரூ.0.40 | D Zone முழுவதும் நீக்கம் செய்து C Zone –ல் சேர்க்கப்பட்டுள்ளது. |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3489/2018/அ3)

**<u>பொருள் எண்.2</u>**

தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2018–19** ன் கீழ், கீழ்க்கண்ட பணிக்கு **11.09.2018** அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| Supply and Delivery of 38 Nos of Battery Operated Vehicle As per Specification | 68,40,000/- | 1. M/s. Arun Indian Motors, Salem. | (-) 1.60 %குறைவு |
| | | 2. M/s.Encon Engineers, Coimbatore | (-) 0.28 %குறைவு |
| | | 3. M/s.Priyam Industries& Engineering Pvt. Ltd., Chennai. | (-) 0.06 %குறைவு |

**அலுவலகக் குறிப்பு :**

1) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளியின் ஒப்பந்ததாரர்களும் டெபாசிட்டிற்கு டெபாசிட் தொகையாக ரூ.**68400/–** வங்கி வரைவோலை இணைத்துள்ளனர்.

2) வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட**(–)1.60%** குறைவாக கொடுத்துள்ள M/s. Arun Indian Motors, Salem அவர்கள் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

(கோப்பு எண்.1447/2017/இ1)

**<u>பொருள் எண்.3</u>**

தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் **2018–19** ன் கீழ், கீழ்க்கண்ட பணிக்கு **04.10.2018** அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| Package-I : Providing BT Road and Storm Water Drain with culvert at Thondikaradu , Koottappalli Kudi street, Koottappalli Tank surrounding, Sakthivel nagar & Weavers Colony, Kailasampalayam to Sengodampalayam Road and Keeleripatti Bus stop to Jeevanagar Road (Ward No.9,12,13,1,5,3 & 11) in Tiruchengode Municipality | 2,67,00,000/- | 1. P.Sivaperumal, Salem. | (+) 4.50% அதிகம் |
| | | 2. P.Paramasivam, Omalur, | (+) 9.94 % அதிகம் |

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளியின் ஒப்பந்ததாரர்களும் டெபாசிட்டிற்கு டெபாசிட் தொகையாக ரூ.267000/– வங்கி வரைவோலை இணைத்துள்ளனர்.

2) வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட(+)4.50% அதிகம் கொடுத்துள்ள P.Sivaperumal, Salem, அவர்கள் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

3) மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை காட்டிலும் (+)4.50% கூடுதலாக ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2309/2018/இ1)

## பொருள் எண்.4

தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–19 ன் கீழ், கீழ்க்கண்ட பணிக்கு 04.10.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| Package-II : Providing BT Road and Storm Water Drain with culvert at Anjaneyarkovil Road, Jothi theatre road,Mahadevapuram, Kongumandapam to Sanarpalayam link road, Kollaptti New Tank road & Karattupalayam(Ward o.17,28,30,31) in Tiruchengode Municipality | 2,33,00,000/- | 1. M/s.Anjaneya Artery Projects Pvt., Ltd, T.gode | (+) 4.50% அதிகம் |
| | | 2. M/s.Balaji Construction, T.gode. | (+) 6.34 % அதிகம் |

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளியின் ஒப்பந்ததாரர்களும் டெபாசிட்டிற்கு டெபாசிட் தொகையாக ரூ.233000/– வங்கி வரைவோலை இணைத்துள்ளனர்.

2) வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட(+)4.50% அதிகம் கொடுத்துள்ள M/s.Anjaneya Artery Projects Pvt., Ltd, T.gode, அவர்கள் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

3) மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை காட்டிலும் (+)4.50% கூடுதலாக ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2309/2018/இ1)

## பொருள் எண்.5

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் வீடுவீடாக குப்பைகளை பிரித்தெடுத்து சேகரித்தல், சேகரிக்கப்பட்ட குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சென்று சேகரித்தல், மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரித்தல், சாக்கடை சுத்தப்படுத்தும் பணி, கொசு ஒழிப்பு பணி ஆகியவற்றிற்கு ஈடுபடுத்தப்படும் துப்புரவு பணியாளர்கள் கடந்த 1997–ம் ஆண்டில் நிர்ணயம் செய்து 235 பணியாளர்கள் அனுமதி பெற்று தற்போது பணிபுரிந்து வரும் நிலையில், தற்போது நகர விஸ்தீரனம், குடியிருப்புகள் அதிகரிப்பு, மக்கள்தொகை அதிகரிப்பு ஆகிய காரணங்களாலும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 96 துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் காலியாக உள்ள காரணத்தாலும், மேற்படி பணிகளை கையாளுவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பொதுமக்களிடத்தில் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதோடு, பலவித தொற்றுநோய்களும் பரவ வாய்ப்பு உள்ளது.

**தற்போதைய நிலை:**

| | |
|---|---|
| 2011–ம் ஆண்டு மக்கள்தொகை | 95335 |
| நகரில் உள்ள மொத்த தெருக்கள் | |
| நகரின் பரப்பளவு | 25.25 sp.km |
| மொத்த குடியிருப்புகள் | 35995 |
| கடைகள் உள்ளிட்ட வணிக நிறுவனங்கள் | 1587 |
| தினசரி வந்து செல்வோர் | 20000 |

**அரசாணை எண். 101/97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள். 30.04.1997–ன் படி தேவையான துப்புரவு பணியாளர்கள்:**

| | |
|---|---|
| 250 குடியிருப்பு 3 பேர்– 35995<br>250 *3 | 432 பேர்கள் |
| டிப்பர் லாரி 3 எண். தலா 3 பேர், 3*3 | 9 பேர்கள் |
| டம்பர் பிளேசர் லாரி 3, தலா 1 நபர் | 3 பேர்கள் |
| கலவை உரக்கிடங்கு 30 மெ.டன்க்கு மேல் 3 பேர் | 3 பேர்கள் |
| பேருந்து நிலைய இலவச கழிப்பறை ஆ,1 பெ–1, | 2 பேர்கள் |
| பேருந்து நிலைய வளாகம் துப்புரவு பணி 'சி' வகுப்பு | 2 பேர்கள் |
| கழிவு நீர் ஊர்தி1 , 2 பேர்கள் | 2 பேர்கள் |
| கொசு ஒழிப்பு பணி 6 பேர்கள் | 6 பேர்கள் |
| **ஆக கூடுதல்** | 459 பேர்கள் |
| அனுமதிக்கப்பட்டதுப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 235 |
| 15.10.2018 அன்று பணியிலுள்ள துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 139 |
| காலியிடம் | 96 |

**துப்புரவு பணியாளர்கள் தேவை விபரம்:**

| | |
|---|---|
| அரசாணை எண் 101/97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 30.04.97–ன் படி தேவையான துப்புரவு பணியாளர்கள் | 459 |
| அரசால் அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் | 235 |
| காலிப்பணியிடம் (15.10.2018) | 96 |
| ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் தனியார் மயமாக்கல் மூலம் பணி செய்ய அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் | 150 |
| தற்போது பணியிலுள்ள துப்புரவு பணியாளர்கள் போக மீதி தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | 170 |

அரசு ஆணையின்படி அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் 235 பேரில் தற்போது 139 பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளதாலும், 96 துப்புரவு பணியாளர்களின் பணி இடங்கள் காலியாக இருப்பதாலும் துப்புரவு பணியில் தொய்வு ஏற்படும் நிலை உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.27/B3/2012, நாாள்.06.01.2012–ன்படி திருச்செங்கோடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை தனியார் மூலம் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே திருச்செங்கோடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்தும் வகையில் தற்போது பணியிலுள்ள 139 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும்

ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களுடன் கூடுதலாக 69 துப்புரவு பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 150 தனியார் துப்புரவு பணியாளர்கள் போக மீதி 170 துப்புரவு பணியாளர்களை அரசு அனுமதிக்கும் பட்சத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதிக்கும் ஊதிய விகிதத்தில் நியமித்து செயல்படுத்தவும், மேற்படி பணியை தனியார்மூலம் மேற்கொள்ள அரசின் அனுமதி கோரி கருத்துரு அனுப்பவும், மேற்படி திட்டம் செயல்படுத்துவதற்கு ஆகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 10328 /2016/எச்1)

**பொருள் எண்.6**

திருச்செங்கோடு நகராட்சியில் இயங்கி வரும் மூன்று வசூல் மையங்களிலும் பணம் எண்ணும் இயந்திரம் வாங்குவது தொடர்பாக 14.09

.2018 அன்று விடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி 29.09.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் வழங்கப்பட்ட தொகை (இயந்திரம் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1 | மகேஸ்வரி எண்டர் பிரைசஸ், இரத்தினசாமிபுரம், 1,சீத்தாராம்செட்டி ரோடு, சேலம். | ரூ.49,796/– |
| 2 | ஓப்பல் டெக், 400 பாரதியார் தெரு, குப்தா நகர், சேலம்–9. | ரூ.48,734/– |
| 3 | ஸ்மார்ட் செக்யூரிட்டி சிஸ்டம், 1, Nakoda Complex, Verpaidyar Nagar, Salem-4. | ரூ.51,330/– |

மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் உள்ள ஓப்பல் டெக், சேலம் நிறுவனமானது மற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களை விட குறைவானத் தொகை ரூ.48,734/–ஐ ஒப்பந்தப்புள்ளியில் வழங்கியுள்ளதால் வரிசை எண்.2ல் உள்ள ஓப்பல் டெக் நிறுவனத்தினருக்கே பணம் எண்ணும் இயந்திரம் மூன்று எண்ணிக்கை வாங்குவதற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3698/2018/பி3)

**பொருள் எண்.7**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பூங்காவில் Onsite Composting முறையில் குப்பைகளை உற்பத்தியாகும் இடத்திலேயே உரமாக்க CUBICAL TUB WITH SHED அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் படி இந்நகராட்சிக்குட்பட்ட 5 பூங்காக்களில் Compost Tub With Shed அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 9.40 இலட்சத்திற்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.4507/2018/இ1)

**பொருள் எண்.8**

திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிவுரையின் படி இந்நகராட்சியில் பணிபுரியும் அக மற்றும் புற பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் பயோ மெட்ரிக் முறையில் வருகைப் பதிவேடு பராமரிக்க 4 எண்ணிக்கையிலான Face Recognition System Devise வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,75,000/—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.4270/2018/இ1)

**பொருள் எண்.9**

பொது நிதி 2018—19ன் கீழ், கீழ்க்கண்ட பணிக்கு 10.10.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் கம்பி வேலி அமைத்தல் | 11,00,000/- | கே.செந்தில்முருகன் | (+) 3.31% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :**

1) வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப் புள்ளியின் ஒப்பந்ததாரர்களும் டெபாசிட்டிற்கு டெபாசிட் தொகையாக ரூ.11000/— செலுத்தி சலான் இணைத்துள்ளார்.
2) வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட(+) 3.31% அதிகம் கொடுத்துள்ள திரு.கே.செந்தில்முருகன், அவர்கள் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

(கோப்பு எண். 3968/2018/இ1)

**<u>பொருள் எண்.10</u>**

திருச்செங்கோடு நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறையில் ஆழ்துளை கிணறு பைப் லைன் பழுது ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் வராமல் இருப்பதால் இதனை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.31,000/—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3832/2018/இ1)

**<u>பொருள் எண்.11</u>**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.22 எட்டிமடைபுதூர் பகுதியில் முறையான சாக்கடை வசதி இல்லாததால் சாக்கடை நீர் அடிக்கடி தேங்கி கொசுத்தொல்லை மற்றும் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதாலும் மற்றும் மழைக்காலங்களில் நீர் வடியாமல் அருகில் உள்ள சுவறுகளில் நீர் ஏறுவதால் இடிந்துவிழும் அபாயம் உள்ளதாக தெரிவித்து அப்பகுதி மக்கள் மனு வழங்கியுள்ளனர். எனவே மேற்கண்ட இடத்தில் நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் நேராய்வில் தெரிவித்துள்ளபடியும் புதியதாக அப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,40,000/—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.4225/2018/இ1)

**<u>பொருள் எண்.12</u>**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN34 F3741 டோசர் வாகனத்தின் இன்சூரன்ஸ் காலம் 30.10.2018 உடன் முடிவடைவதால் இன்சூரன்ஸ் புதுப்பித்துக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.7497/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.4528/2018/எச்2)

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சி பழைய பேருந்து நிலையம் –புதிய பேருந்து நிலையம் இணைப்பு சாலை அருகே கட்டப்படவிருந்த 12 கடைகளில் ஏற்கனவே 6 கடைகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள 6 கடைகளும் கட்டப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. இதில் கடை எண்.10–ற்கு திருமதி.எஸ்.ராஜேஸ்வரி என்பவர் முன்ஏலம் எடுத்துள்ளார். இந்நிலையில் தனக்கு காலியாக உள்ள கடை எண்.11க்கு ஒதுக்கீடு செய்து தருமாறு மனுவில் கோரியுள்ளார். மேற்கண்ட கடை எண்.11ஐ அன்னாருக்கு ஒதுக்கீடு செய்து உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | முன் உரிமதாரர் பெயர் | முந்தைய கடை எண் | 23.2.2016ல் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி | தற்போது ஒதுக்கீடு கடை எண் | 23.02.2016ல் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி | நிர்ணயம் செய்யப்படும் வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | திருமதி.எஸ்.ராஜேஸ்வரி | 10 | ரூ.7,300/– | 11 | ரூ.7,350/– | ரூ.7,350/– |

**அலுவலகக்குறிப்பு**

01.03.2016–ம் தேதிய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.636–ஐ இரத்து செய்து, முன்னுரிமை அடிப்படையில் கலம் 7–ல் காணும் உயர்ந்தபட்ச வாடகையினை உறுதி செய்து உரிமம் வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(கோப்பு எண்.205/2016/அ1)

**பொருள் எண்.14**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் உருவாக்கும் கொசுப்புழுக்களை அழிக்கவும், குப்பைகள் அள்ளிய இடங்களிலும், சாக்கடை கழிவுகள் அப்புறப்படுத்திய இடங்களிலும் கிருமி நாசினியாக உபயோகப்படுத்தப்படும் பிளீச்சிங் பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் குறைந்த அளவே இருப்பில் உள்ளதாலும் தற்போது டெங்கு காய்ச்சல் மற்றும் மழைக்காலம் ஆரம்பமாவதாலும் உடனடியாக அவசர அவசியம் கருதி பிளீச்சிங் பவுடம், நீர்த்த சுண்ணாம்புத்தூள் தலா 20 டன்கள் 2018–2019ம் ஆண்டிற்கு வாங்க உத்தேச செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர் வாங்க பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5060/18/எச்1)

ந.க. எண்.205/2016/அ1

## திருச்செங்கோடு நகராட்சி

## மன்றப்பொருள்

திருச்செங்கோடு நகராட்சி பழைய பேருந்து நிலையம் –புதிய பேருந்து நிலையம் இணைப்பு சாலை அருகே கட்டப்படவிருந்த 12 கடைகளில் ஏற்கனவே 6 கடைகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள 6 கடைகளும் கட்டப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. இதில் கடை எண்.10–ற்கு திருமதி.எஸ்.ராஜேஸ்வரி என்பவர் முன்ஏலம் எடுத்துள்ளார். இந்நிலையில் தனக்கு காலியாக உள்ள கடை எண்.11க்கு ஒதுக்கீடு செய்து தருமாறு மனுவில் கோரியுள்ளார். மேற்கண்ட கடை எண்.11ஐ அன்னாருக்கு ஒதுக்கீடு செய்து உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | முன் உரிமதாரர் பெயர் | முந்தைய கடை எண் | 23.2.2016ல் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி | தற்போது ஒதுக்கீடு கடை எண் | 23.02.2016ல் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி | நிர்ணயம் செய்யப்படும் வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | திருமதி.எஸ்.ராஜேஸ்வரி | 10 | ரூ.7,300/– | 11 | ரூ.7,3500/– | ரூ.7,350/– |

அலுவலகக்குறிப்பு

01.03.2016–ம் தேதிய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.636–ஐ இரத்து செய்து, முன்னுரிமை அடிப்படையில் கலம் 7–ல் காணும் உயர்ந்தபட்ச வாடகையினை உறுதி செய்து உரிமம் வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி.